முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 711**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**09.09.2021**, வியாழக்கிழமை

1. அறமெனும் சக்தி கொண்ட ஞானியே
அன்னதான வள்ளலே ஆறுமுக அரங்கனே
வரம் பெற்று என் சக்தியாக வாழும்
வையகத்தின் மாதர்ம யோகியே
2. யோகியே ஆறுமுக அரங்கனே
உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆறுதல்பட சுப்ரமணியர் யானும்
அருளுவேன் அரங்கன் உன் நிலைகள் மாற
3. மாறவே அற்புதங்கள் பெறவும்
மகத்துவம்பட அவதார நோக்கம் வெற்றி கொள்ளவும்
பேருலகம் ஞான வழிக்கு வரவும்
பிரம்ம சக்தியாக உன் தொண்டர் படைகள் பெருகி
4. பெருகியே கலியுகத்தை மாற்றவும்
புகலுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே ஞான அறிவுரை ஆசி தன்னை
ஆசி பெற்று அரங்கன் உன் கரம்பட
அகிலத்தில் எந்த மூலையில் தொண்டர்கள் இயங்கினாலும்
5. இயங்குகின்ற அனைத்து ஞானியர்களுக்கும்
எல்லையில்லாத மகா சக்தியை ஆறுமுகன்
வல்லமைபட தந்து அவர்களோடு இணைந்து
வையகத்தில் ஞான வாழ்வை உருவாக்கி சுப்ரமணியப்பெருமான் யானும்
6. யானும் உந்தன் சக்தியாக
எல்லா திக்கும் இறங்கி
உயர் தொண்டர்களை படைத்து
ஞானயுகமாற்றத்தை உருவாக்கி அருள்வேன்
7. அருளவே அரங்கன் உன் ஞானம்
அகிலத்தை மாற்றக்கூடும் அறம்மிக்கஅரங்கன் உன்தர்மம்
மகிழவே மக்களை புண்ணியவான்கள் ஆக்கி
மண்ணுலகில் தர்மஞான ஆட்சியை உருவாக்கும்

8. ஆகவே அரங்கனே உந்தனுக்கு சக்தியூட்டி
அனுதினமும் யான் இருப்பதாலே
அரங்கனுக்கு தருகின்ற அமுதெல்லாம்
அகிலத்தில் ஞான அமுதாக மாறும்
9. மாறுகின்ற அந்த சக்தி மூலமே
மக்களுக்கு அன்னதான சக்தியாக பரவி
மண்ணுலகமே புண்ணியபூமியாக மாறி
மாறியே அரங்கனால் ஞானலோக வாழ்வு மக்களெல்லாம் அடைந்து
10. தேக்கமின்றி ஞானஆட்சி மலர்ந்து
தெய்வ ஞான ஆட்சிகள் மூலம் உலகோர்
அமைதி பாதுகாப்பு சர்வபலமும் பெறுவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

அருளாளன் ஆறுமுகன் அருளிய நூலை
இருளெல்லாம் விலகியே இன்பம் உண்டாம்!

நாட்டமாம் ஆறுமுகன் நல்கிய வேதம்
வாட்டம் தவிர்த்தே வையகம் செழிக்குமே!